**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2018**

-----------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, மன்றத்தின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------

இந்த அறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து மன்றத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5. 1. நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------ | ------------------------------ | ------------- |
| (அ) | மூலதன அளிப்புகள்மூலம் கொள்-வனவு செய்யப்படுகின்ற சொத்-துக்கள், கணக்கு வைத்தல் மற்றும் அந்த சொத்துக்களை கடன்தீர்ப்பு செய்வதற்கு கணக்-கீட்டு கொள்கைகளை அடை-யாளம் காணப்பட்டு குறித்த கொள்கையை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மூலதன அளிப்புகளை கடன்தீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | மூலதன அளிப்புகள் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்-துக்களை கணக்கிடல் மற்றும் கடன்தீர்ப்பு செய்-யும் கணக்கீட்டு கொள்-கை அடையாளம் காண-ப்பட்டு நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டில் திசெ-ம்பர் 31 ஆம் திகதியின் நிதிக்-கூற்றுகள் பிரகாரம், 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக நேர்-வரிசை அமைச்சிடமிருந்து கிடை-க்கப்பெற வேண்டிய மீதிகளாக ரூபா.4,412,405 என நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிரு-ப்பினும், அமைச்சின் தகவல்களுக்-கமைவாக அவ்வாறானதொரு மீதி மன்றம் செலுத்த வேண்டியதில்லை என்று அவதானிக்கப்பட்டது. மேலும் பல ஆண்டுகளாக தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையிடம் செலுத்தப்பட வேண்டி-யதாக ரூபா.625,490 ஐ முன்-கொண்டு வரப்படினும், கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் நிதிக்கூற்றுகளின்படி அதற்கு இணையாக கிடைக்கப்பெற வேண்டிய மீதியை அந்த நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட-வில்லை. ஆயினும், இந்த மாற்றங்கள் தொடர்பில் தேடி-ப்பார்த்து நிதிக் கூற்றுகளில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் முகாமைத்-துவ சபை மூலம் உறுதியான தீர்மானம் எடுத்தல் | சம்பந்தப்பட்ட நிறுவன-ங்களிடமிருந்து உறுதி-யினை பெற்றுக்கொண்டு அந்த மீதிகளை சீராக்கு-வதற்கு அல்லது பதிவழி-ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கு எழுத்திலான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| விடயம் | தொகை ரூபா. | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் | 10,763,206 | மீதிகளை உறுதிப்படுத்தல் | உறுதிகளை சான்றுப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உறுதிப்படுத்தலை துரிதமாக பெற்றுக்கொண்டு கடன்மீதி சீராக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்.

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் மன்றத்தின் அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.3,073,056 ஆன பண்டிகை முற்பணம் மற்றும் ஊழியர் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆண்டில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அறவிட வேண்டிய பணத்தொகை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2012 நவம்பர் 07 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழுவில் ஐந்து ஆண்டுகளுக்குள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீள அறவிடுவதற்கு வலியுறுத்திய ரூபா. 2,457,239 ஆன தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை அறவிடப்படவில்லை. | கோரிக்கை முன்வைக்கப்படினும், தொழிலாளர் கொங்கிரஸ் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை | பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். |
| (இ) | ஜனசக்தி அபிவிருத்தி கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக தனியார் நிறுவனத்திடம் கணினி தரவு முறைமை ஏற்படுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டில் வழங்கிய ரூபா. 541,840 ஆன முற்பணத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பில் கூடிய விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 5 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் நடைமுறை சொத்துக்களின்கீழ் காணப்பட்ட மொத்தம் ரூபா. 13,677,199 ஆன முற்பண மீதி சீராக்குவதற்கு அல்லது உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு மன்றத்தால் செயற்படவில்லை | இந்த முற்பணத் தொகையின் மீதிகளுக்கு ஏற்புடையதாக உரிய பணிகளை முடிவுறுத்துவதற்கு முன்னர் பல்வேறு காரணங்களின்மீது அறவிடுவதற்கு தவறவிடப்பட்டுள்ளமை. | தீர்க்கப்படாத முற்பணங்களை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 605,312 ஆன மின்சார கட்டணம், தொலைபேசி கட்டணம் மற்றும் நீர் கட்டணம் மீளாய்விற்கான ஆண்டிலும் செலுத்துவதற்கு மன்றம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் நெர்வரிசை அமைச்சு மூலம் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளத. | நிதிக் கூற்றுகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | பல ஆண்டுகள் தொடக்கம் முன்கொண்டு வரப்படும் மொத்தம் ரூபா. 91,566,028 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த பெறுமதியில் ரூபா. 385,867 தொகையிலான சம்பளம் நேரடியாக அமைச்சினால் தீர்க்கப்பட்டுள்ளது. | சீராக்கப்பட்ட மீதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கும், செலுத்தப்பட வேண்டிய மீதிகளை சீராக்குவதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2013 பெப்ருவரி தொடக்கம் 2013 யூலை வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதான ஊழியர் சேமலாப நிதியத்திடம் செலுத்தப்பட வேண்டிய ரூபா.4,205,283 ஐ செலுத்தப்படவில்லை. | இந்த கடன் மீதி சீராக்குவதற்கு தேவையான ஒதுக்கீடு மன்றத்திடம் இல்லாமை. | பொறுப்புகளை சீராக்குவதற்கு ஒரு முறைமை துரிதமாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை ரூபா | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக்கோவ | | | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 371(1) | கணக்குகளிலிருந்து முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா . 177,688 ஆன சில்லறை கட்டுநிதி மீதி காணப்பட்டது. | முற்பணம் பெற்றுக்கொண்ட நபருக்கு வழக்கு உள்ளதால் அதனை மீளஅறவிடுவதற்கு இயலாமை | துரிதமாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 371(2) | பல ஆண்டுகள் தொடக்கம் மன்றத்தின் அலுவலர் ஒருவருக்கு வழங்கிய ரூபா. 523,000 ஆன முற்பணத் தொகை தீர்ப்பதற்கு மீளாய்விற்கான ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அலுவலரது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கடிதக்கோவைகள் மேலும் மன்றத்தில் உள்ளபடியால் இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு இயலும். | அறவிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூலை 02 ஆம் திகதி பீஈடீ/12 இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 6.5.3 பந்தி | 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை ஆண்டு அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆண்டு தொடக்கம் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 26,996,086 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 29,644,908 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 2,648,822 ஆன விருத்தி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு நிலையான சொத்துக்களின் தேய்மான செலவினம் குறைவடைதல் பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

----------------------------

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டில் மன்றத்தால் ரூபா. 150,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு வெளியக ஆலோசகர் ஒருவரிடமிருந்து தயாரித்துக்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் 2022 ஆம் ஆண்டிலும் அங்கீகரித்துக்கொள்ளப்படவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிப்பதற்கு முன்னர், மன்றத்தின் தற்கால கடமைப்பொறுப்பு மற்றும் நோக்கங்களுக்கு பொருந்துகின்ற வகையில் பதவியணியை தயாரித்துக்கொண்டு பின்னர் ஆட்சேர்ப்புத்திட்டங்களை தயாரிக்கும்படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. | அத் திணைக்களத்தின் ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2005 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மன்றம் தாபிக்கப்பட்ட சட்டத்தில் 10(2) பிரிவின் கீழ் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த காணிகள் மற்றும் கட்டிடங்களின் பொருட்டு உறுதிகளை தயாரிக்காமை காரணமாக, மன்றத்தின் எல்லா அசையும் சொத்துக்களை அமைச்சிடம் கையளிப்பதற்கு இயலாதிருந்தது. | அட்டனில் அமைந்துள்ள தொண்டமன் தொழில்சார் பயிற்சி நிலையத்தின் ஏற்புடைய காணிகள் மற்றும் கட்டிடங்களின் பொருட்டான உரிமை அம்பகமுவ பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. நோர்வுட் விளையாட்டு மைதனத் தொகுதியில் கடித ஆவணங்கள் எதுவும், மன்றத்திடம் வழங்காமை காரணமாக அதற்கு உரித்து உறுதி தயாரித்தல் மிகவும் கடினமானதாகும். | உரித்துகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான கடித ஆவணங்களை தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | மன்றத்தால் பராமரிக்கப்படும் 44 ஜனசக்தி நிலையங்களின் உரிமை சுவீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், மன்றத்திடம் சட்டரீதியிலான உரித்து கையேற்கப்படாத காணிகளில் 35 ஜனசக்தி நிலையங்களை நிருமாணிப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் காணி அளவையிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா. 2,359,298 ஐ செலவிடப்பட்டிருப்பினும், குறித்த செலவினங்கள் பயனற்ற செலவினமாக காணப்பட்டது. | இந்தக் காணி அளவையிடப்படினும், சுவீகரித்துக்கொள்ளாது அந்த நிலையங்களில் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பொருளாதார ரீதியாக பயனுள்ள வகையில் பணம் செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 நவம்பர் 26 ஆம் திகதி ரம்பொட கலாச்சார நிலையம் பொருட்டு ரூபா. 5,840,000 பெறுமதியிலான டபல்கெப் வண்டி யுனயிடட் மோட்டர்ஸ் லங்கா (தனியார்) கம்பெனியிடமிருந்து குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,565,504 ஐ முற்பணமாக செலுத்தப்பட்டிருப்பினும், தவணை செலுத்தாமை காரணமாக 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் குத்தகை கம்பெனியால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் இது தொடர்பாக குத்தகை கம்பெனியுடன், கலந்துரையாடப்பட்டு அறவிடுவதற்கு முடியுமா என்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தல். | குத்தகை கம்பெனியுடன் கலந்துரையாடப்பட்டு அந்த பணத்தொகையினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

**3.3 பயனற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| சுய தொழில் கடன் திட்டத்தின் கீழ் (Self- Employment Loan Project) ஜனசக்தி நிலையங்களிடம் வழங்குவதற்கு 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 01 ஆம் திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா. 736,000 பெறுமதியான 8 சீமெந்து ப்ளொக் கல் மெஷின்களை சுய தொழில் மேற்கொள்பவர்களிடம் பகிர்ந்தளிக்காது 2022 மார்ச் மாதம் வரை பயனற்று காணப்படுதல். | இந்த 08 மெஷின்கள் ஜனசக்தி நிலையங்களில் சுயதொழில் வேலை திட்டத்தின்கீழ் பராமரிப்பதற்கு பிரேரணை செய்துள்ளதுடன், அந்தக் கருத்திட்டம் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். | பயனுள்ள பணியில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |